©
தமிழ்நாடு அரசு
2023

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 20] சென்னை, புதன்கிழமை, மே 17, 2023
வைகாசி 3, சோபகிருது, திருவள்ளுவர் ஆண்டு–2054

# பகுதி III—பிரிவு 1(b) இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

*[அரசாணை (நிலை) எண். 16, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (P1)த் துறை, நாள் 15–2–2023.]*

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 309 ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப் பணிக்கான (1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூலின் தொகுதி III இல்–பிரிவு–7–B) சிறப்பு விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

2. இங்கு செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் 05–04–2010 ஆம் நாளன்றும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வந்துள்ளதாகக் கருதப்பட வேண்டும்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன சிறப்பு விதிகளில்,

1. விதி எண் 2–இல், “நெடும்பத்தி (1)–இல் உள்ள 1. தொழில் பயிற்சி நிறவனங்களில்/மையங்களில் பயிற்சி அலுவலர்கள்” எனும் வகைப்பாட்டிற்கு நேராக, நெடும்பத்தி (2)–இல், உள்ள “நியமன முறை”யில் இனம் (ii) (b)–இல், “மற்றும் உதவிப் பயிற்சி அலுவலராக ஐந்து ஆண்டு அனுபவம்” என்ற சொற்றொடர் நீக்கப்பட வேண்டும்.

2. விதி எண் 5–இன் துணை விதி (b)–இல் குறிப்பிடப்பட்டுள்ள பிற்சேர்க்கையில், நெடும்பத்தி (1)–இல் உள்ள “தொழில் பயிற்சி நிறுவனங்களில்/மையங்களில் பயிற்சி அலுவலர்கள்” எனும் வகைப்பாட்டிற்கு நேராக, நெடும்பத்தி (2)–இல் பணி நியமன முறை எனும் தலைப்பின் கீழ் உள்ள “பதவி உயர்வு”க்கு நேராக நெடும்பத்தி (3)–இல், தகுதிகளில்,

   (i) தற்போதுள்ள பத்தி 1(a) என எண்ணிடப்பட வேண்டும் மற்றும் ‘அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு’ (AICTE) என்ற சொற்றொடருக்குப் பின்னர், ‘மற்றும்’ என்ற சொல் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

   (ii) பத்தி 1(a)–க்குப் பின்னர் பின்வருவன சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

1(b) தொழிற்பயிற்சி நிறுவனங்கள்/மையங்களில் மற்றும்/அல்லது 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுநர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 52/1961)கீழ் உதவிப் பயிற்சி அலுவலராக மற்றும்/அல்லது தொழிற்பயிற்சி நிறுவனங்கள்/மையங்களில் கண்காணிப்பாளராக (பராமரிப்பு)/கண்காணிப்பாளராக (மின்) மற்றும்/அல்லது வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர் அலுவலகத்தில் கொள்முதல் உதவியாளராக இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத அளவிற்குப் பணிபுரிந்திருக்க வேண்டும்; அல்லது

2(a) பத்தாம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்; மற்றும்

2(b) 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுநர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 52/1961) கீழ் வழங்கப்பட்ட தேசிய தொழில் பழகுநர் சான்றிதழ் அல்லது தேசிய தொழில் பழகுநர் பயிற்சித் திட்டத்தின் கீழ் தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் (National Council for Training in Vocational Trades) வழங்கப்பட்ட தொழில் பழகுநர் சான்றிதழ் அல்லது தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் (National Council for Training in Vocational Trades) வழங்கப்பட்ட தேசிய தொழிற் சான்றிதழ் (National Trade Certificate) அல்லது மத்திய அரசால் வழங்கப்பட்ட கைவினைஞர் பட்டயச் சான்றிதழ் அல்லது இதற்கு நிகராக மத்திய அரசால் வழங்கப்பட்ட ஏனைய யாதொரு சான்றிதழ் அல்லது தொழில் மற்றும் வணிகத் துறையால் அல்லது வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் வழங்கப்பட்ட தொழிற்பள்ளி சான்றிதழ் அல்லது கைவினைஞர் சான்றிதழ் அல்லது அதற்கு நிகரான ஏனைய யாதொரு தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்; மற்றும்

2(c) தொழிற்பயிற்சி நிறுவனங்கள்/மையங்களில் மற்றும்/அல்லது 1961ஆம் ஆண்டு தொழில் பழகுநர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 52/1961)கீழ் உதவிப் பயிற்சி அலுவலராக மற்றும்/அல்லது தொழிற்பயிற்சி நிறுவனங்கள்/மையங்களில் கண்காணிப்பாளராக (பராமரிப்பு/கண்காணிப்பாளராக (மின்) மற்றும்/அல்லது வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர் அலுவலகத்தில் கொள்முதல் உதவியாளராக ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் பணிபுரிந்திருக்க வேண்டும்.

**முகமது நசிமுத்தின்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர் (மு.கூ.பொ.),*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.